பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 01 2025 **TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அரசின் கொள்கை முடிவுகளை எடுப்பதற்கு புள்ளியியல் மற்றும் கணக்கீட்டு தொழில்நுட்பங்கள் முக்கிய பங்காற்றுவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

- பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இந்தியாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

- தலைநகர் தில்லியில் ரயில்வே கட்டமைப்பில் மாபெரும் மறுசீரமைப்புத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

- மகா கும்பமேளாவில் 3 கோடியே 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இன்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர்.

- உலகக்கோப்பை கோ-கோ போட்டியில் இந்தியா இன்று பிரேசிலை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<>>>>>>

அரசின் கொள்கை முடிவுகளை துல்லியமாக எடுப்பதற்கும், சிறந்த அரசு நிர்வாகத்தை உறுதி செய்வதற்கும் புள்ளியியல் மற்றும் கணக்கீட்டு நுட்பங்கள் முக்கிய பங்காற்றுவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று தம்மை சந்தித்த இந்திய புள்ளியியல் சேவையில் இணைந்துள்ள புதிய அதிகாரிகளிடம் உரையாற்றிய குடியரசுத் தலைவர், சுகாதாரம், கல்வி, மக்கள் தொகை, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் புள்ளியியல் தகவல்கள் அரசின் கொள்கைகளை வகுப்பதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்று கூறினார்.

அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்பு மிக்கதாகவும் கொண்டுவருவதற்கு தேசிய அளவிலான புள்ளி விவரங்கள் பெரிதும் உதவுவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு புள்ளியியல் கணக்கீகள் முதுகெலும்பாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின் பயன்கள் மற்றும் அவற்றை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கும் புள்ளியியல் தரவுகள் ஆக்கப்பூர்வமான பயனை அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசின் திட்டங்கள் குறித்த தகவல்களை மக்கள் சரியான முறையில் புரிந்துகொள்வதற்கும் கணக்கீட்டு முறைகள் உதவுவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<>>>>>

வேளாண்மை மற்றும் கடல்சார் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு வானிலை குறித்த நிகழ்நேர தகவல்கள் பெரிதும் உதவிடுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று வானிலையை துல்லியமாக கணக்கிடும் இந்திய வானிலை ஆய்வுத்துறையின் **Mausam** இயக்கத்தை பிரதமர் தொடங்கிவைத்து பேசினார்.

வானிலை குறித்த தகவல்கள் 90 சதவீத மக்களுக்கு சென்றடையும் வகையில், தற்கால தொழில்நுட்பம் மேம்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எதிர்வரும் 10 நாட்களுக்கான வானிலையை சாதாரண மக்களும் அறிந்துகொள்வதன் மூலம், இயற்கை பேரிடரிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு போதிய அவகாசம் கிடைப்பதாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இருந்த வானிலை மாற்றங்களையும் அறிந்துகொள்வதற்கு இந்த **Mausam** இயக்க கட்டமைப்பு உதவிடும் என்றும் பிரதமர் கூறினார்.

வானிலை மற்றும் பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் இருப்பதற்காக இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் செயல் திறன் மேம்படுத்தப்பட்டிருப்பதால், பேரிடர் நிர்வாகத்திறன் உயர்ந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தரவுகள் துல்லியமாக இருப்பதால், நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், இலங்கை உள்ளிட்ட பல நாடுகள் பயன்பெற்று வருவதாக தெரிவித்தார்.

பிற நாடுகளில் இயற்கை பேரிடர் நிகழும்போது உதவிக்கரம் நீட்டுவதில் இந்தியா முதல் நாடாக திகழ்கிறது என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இந்தியாவின் வானிலை முன்னறிவிப்பு கட்டமைப்புத்திறன் உயர்ந்திருப்பதாக தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் வானிலை முன்னறிவிப்பு கட்டமைப்பு 50 சதவீதம் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் 150-ஆவது ஆண்டையொட்டி, பிரதமர் நினைவு நாணயம் ஒன்றை வெளியிட்டார்.

<<<<<>>>>>

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரும், இந்தியாவும் இணைந்தால்தான் முழுமையான ஜம்மு காஷ்மீர் உருவாகும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்மு அருகே அக்னூர் என்ற இடத்தில் முன்னாள் ராணுவத்தினர் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றிய திரு ராஜ்நாத் சிங், பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியில் உள்ள மக்கள் மத ரீதியாக பிளவுப்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து நமது ராணுவத்தால் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், எந்தவொரு சூழலையும் எதிர்கொள்ள நமது ராணுவம் தயார் நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய மண்ணை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நமது ராணுவ வீரர்கள் பல முறை போர் நடந்தபோது அர்ப்பணிப்பு உணர்வோடு போரிட்டு வெற்றிபெற்றதாக தெரிவித்தார்.

ராணுவ வீரர்களின் தியாகத்தை போற்றுவதாக கூறிய அவர், பயங்கரவாதத்தை வேரோடு களைவதிலும் அவர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமையாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

அக்னூரில் உள்ள பாரம்பரிய அருங்காட்சியகத்தில் 108 அடி உயர தேசியக்கொடியை திரு ராஜ்நாத் சிங் ஏற்றிவைத்தார்.

<<<<<>>>>>

தலைநகர் தில்லியில் மாபெரும் ரயில்வே மறுசீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஆகாஷ்வாணிக்கு அவர் அளித்த பேட்டியில், கடந்த பத்தாண்டுகளில் ரயில்வே பட்ஜெட்டில் தில்லியின் மேம்பாட்டுக்கென அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

தில்லியில் உள்ள 13 நிலையங்களில் மறுசீரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் வெகு விமரிசையாக நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் இன்று மூன்று கோடியே 50 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர்.

அமிர்த ஸ்நானம் என்று அழைக்கப்படும் இந்த நீராடலில், லட்சக்கணக்கான பக்தர்கள் மட்டுமன்றி, சாதுக்களும் கலந்துகொண்டனர்.

அனைத்து பூஜைகள் மற்றும் வழிபாடுகளும் பாதுகாப்பாகவும், சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன.

பக்தர்கள் தங்களது வேண்டுதல்களையும், பூஜைகளையும் எவ்வித சிரமமும் இன்றி நிறைவேற்றி வருகின்றனர்.

பாரம்பரிய முறைப்படி இந்த அமிர்த ஸ்நானம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இன்று காலை நடைபெற்ற கங்கை ஆரத்தி நிகழ்ச்சியில், திரளான மக்கள் பங்கேற்றதாகவும் அவர் கூறுகிறார்.

மகா கும்பமேளா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு பாஷினி என்ற அரசின் தகவல் தளம் உதவி வருகிறது.

மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறையின் இந்த தகவல் தளத்தில் 11 மொழிகளில் நிகழ்நேர மொழி பெயர்ப்பு செய்து தரப்படுகிறது.

இதனை பயன்படுத்த விரும்பும் யாத்ரிகர்கள் தங்களது தாய்மொழியில் தகவலை தெரிவித்தால் உடனடியாக அந்த தகவல் நிர்வாகத்திடம் தெரிவிக்கப்பட்டு, அதற்கான பதிலும் தெரிவிக்கப்படுகிறது.

பக்தர்களின் குறைகளை தீர்ப்பதற்கும், பாஷினி தளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மகா கும்பமேளாவின் முக்கிய நாளான மகர சங்கராந்தி திருநாளில் திரிவேணி சங்கமத்தில் அமிர்த ஸ்நானத்தில் பங்கேற்ற அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

பக்தர்களின் ஆன்மிக உறுதிபாட்டையும், அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கும் வகையில் மகா கும்பமேளா அமைந்துள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**<<<<<>>>>>**

தேசிய மஞ்சள் வாரியத்தை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

புதுதில்லியிலிருந்து இந்த வாரியத்தை தொடங்கிவைக்கும் நிகழ்ச்சியில் பேசிய திரு பியூஷ் கோயல், மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகள் தரமான மஞ்சள் வகைகளை உருவாக்கும் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தேசிய மஞ்சள் வாரியம் மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

நாட்டில் 20 மாநிலங்களில் அதிக அளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுவதாக தெரிவித்த அவர், உலகின் மொத்த மஞ்சள் உற்பத்தியில் 70 சதவீதம் இந்தியாவில் இருப்பதாக கூறினார்.

மஞ்சளிலிருந்து மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை தயாரிப்பது, ஆராய்ச்சி, கட்டமைப்பு, ஏற்றுமதியை ஊக்குவித்தல், மஞ்சள் சாகுபடியை அதிகரித்தல் போன்றவற்றிற்கும் தேசிய மஞ்சள் வாரியம் தனது பங்களிப்பை செலுத்தும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் தற்போது 30-க்கும் மேற்பட்ட மஞ்சள் வகைகள் உள்ளதாக தெரிவித்த அவர், இவை அனைத்தும் சர்வதேச தரத்திலானவை என்றும் கூறினார்.

மஞ்சளின் மருத்துவ குணங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியையும் இந்த வாரியம் மேற்கொள்ளும் என்று அவர் தெரிவித்தார்.

மஞ்சள் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதற்கான புதிய வாய்ப்புகளையும் தேசிய மஞ்சள் வாரியம் உருவாக்கித்தரும் என்றும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை கோ-கோ போட்டியில் இந்தியா இன்று பிரேசிலை எதிர்கொள்கிறது.

புதுதில்லியில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 8.15க்கு தொடங்குகிறது.

-----

இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பி வி சிந்து – சீன தைபே-யின் **'Sung Shou-yu-**ஐ தோற்கடித்தார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இந்த போட்டியில் பி வி சிந்து இந்த வெற்றியை பதிவு செய்துள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் கிரண் ஜார்ஜ் உலக தரவரிசையில் 25-ஆம் இடததில் உள்ள யுஷி தனகாவை வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா – தனிஷா கிராஸ்டோ இணை – தென் கொரியாவின் **'Yin-Hui Hsu** – சீன தைபே-யின் **Cheng Kuan Chen** இணையை தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் குணசிகா அணி – சூர்மா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி ராஞ்சியில் இரவு மணி 8.15-க்கு தொடங்குகிறது.

<<<<<END>>>>>